AWARDS * PRIZES * TITLES * TRIBUTES

"I can understand the difficulties of a translator of scientific books and I tender my congratulations to Prof N Subbu Reddiar on his having won the prize for the best translation of Heisenberg's Nuclear Physics."

<< Bharat Rathna C Rajagopalachari [Rajaji]

"What is left when honour is lost?" << Publilius Syrus

Honours

During his long 65 years of dedicated service to Tamil, Tamil development and education, Professor, in recognition thereof, received several awards, prizes, etc from a variety of Organizations, such as Government of Tamilnadu, University of Madras, several Charitable Trusts, non-profitable organizations, etc. Most of them came after 1977, the year of his retirement from Sri Venkateswara University, Tirupathi, Andhra Pradesh indicating his life-long and enduring contribution to the Tamil and Tamil development till he passed away on 1 May 2006.

In spite of these recognitions, Professor continued to lead a simple and humble life, to paraphrase Goethe, ' *The deed is all, glory nothing* '.

	<u>Citation</u>: "Dr N Subbu Reddiar, a leading and distinguished scholar, is recommended by the Syndicate and the Senate of the Madurai Kamaraj University to receive the Degree of **Doctor of Literature** [*honoris causa]* to which, Madam, I pray, he be admitted."
	“அவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு “கலைமாமணி” விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.”

கலைமாமணி விருது



கலைமாமணி விருது பெறும்
இயற்றமிழ்க் கலைஞர்
பேராசிரியர் **டாக்டர். ந. சுப்புரெட்டியார்**

எண்ணற்ற விருதுகளும், ஏராளமான பரிசுகளும் பெற்று இயற்றிமிழின் காவலர்களில் ஒருவராகத் திகழும் பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார் அவர்கள், 1916-ஆம் ஆண்டு திருவாளர் ஞானி நல்லப்பரெட்டியார் - திருமதி. காமாட்சியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர்.

தனது எண்பத்து மூன்று கால தமிழ்ப்பணியில் இவர் புரிந்திருக்கும் சாதனைகள் ஏராளமாகும். எம்.ஏ., பி.எஸ்ஸி., எல்.டி., பி.எச்டி., வித்வான் ஆகிய படிப்புப் பட்டங்களைப் பெற்ற இவர், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தால் ''அருங்கலைக்கோன்'', பண்ருட்டி வைணவ மாநாட்டில் ''ஸ்ரீசடகோபன் பொன்னடி'', மதுரை, காமராசர் பல்கலைக் கழகத்தால் ''தமிழ்ப் பேரவைச் செம்மல்'', சென்னை ஆழ்வார் ஆய்வு மையத்தால் ''இராமானுசர் விருது'', சென்னை கம்பன் கழகத்தினரால் ''பேராசிரியர் இராதாகிருட்டிணன் விருது'', ''இராசா சர் முத்தையா விருது'', தமிழக அரசின் ''திரு.வி.க. விருது'' ஆகிய விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவராவார். இவர் சிறந்த நூல்களுக்கான ஒன்பது பரிசுகளையும் பெற்றிருக்கிறார்.

பள்ளித் தலைமை ஆசிரியராகவும், பல கல்லூரிகளில் தமிழ்த்துறை தலைவராகவும், சென்னை பல்கலைக் கழகத்தில் தமிழ் இலக்கியத் துறை பேராசிரியராகவும், தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகவும், தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மரபு-வழிப் பண்பாட்டு நிறுவனத்தின் இயக்குநராகவும் பல்லாண்டுகள் பணியாற்றிய பேராசிரியர் திரு.ந. சுப்புரெட்டியார் அவர்கள், இலக்கியம், சமயம், தத்துவம், அறிவியல், வாழ்க்கை வரலாறு, ஆராய்ச்சி, கல்வி, உளவியல் துறைகளில் 120-க்கும் மேற்பட்ட அரிய நூல்களைத் தமிழுலகிற்குத் தந்த அவரது எழுத்துப் பணி பெரும் பாராட்டுக்குரியது.

அவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

தமிழ்ப் பேரவைச் செம்மல்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
தமிழ்ச் செம்மல்கள் பேரவை

தமிழகக் கல்வி அமைச்சர், இணைவேந்தர், மாண்புமிகு

திரு. இராம. வீரப்பன் அவர்கள்

டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கட்குத்

'தமிழ்ப் பேரவைச் செம்மல்'

என்ற பட்டத்தினையும் பொற்பதக்கத்தினையும் நல்கித்

தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு

திரு. சேடபட்டி இரா. முத்தையா *அவர்கள்*

பொன்னாடை போர்த்திச்

சிறப்புச் செய்த ஞான்று

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

பேராசிரியர் டாக்டர் மா. இலட்சுமணன் அவர்கள்

படித்தளித்த தகுதியுரை

தி.வ. உ0உஉ, புரட்டாசி கக, வியாழக்கிழமை 17—10—1991

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார்

ஆந்திர மாநிலத்திற்குச் சென்று அருந்தமிழ்க் கல்விக்கும் ஆய்வுக்கும் பல்லாண்டுக் காலம் பணி ஆற்றியவர் டாக்டர் ந. சுப்புரெட்டியார். எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களைத் தமிழ் கூறு நல்லுலகத்திற்கு வழங்கியுள்ள பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்களுக்கு நம் பல்கலைக்கழகம் இன்று 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் உயரிய பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பொற்பதக்கம் அளித்துப் பாராட்டுகின்றது.

திருச்சி மாவட்டத்தில் துறையூர் வட்டத்தைச் சார்ந்த கோட்டாத்தூரில் 7-9-1917-இல் பிறந்தவர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார். பி.ஏ.,பி.எசி, வித்துவான், எம்.ஏ., பிஎச் டி., என்பன அவர் பெற்றுள்ள கல்விப் பட்டங்கள் ஆகும்.

துறையூர்ச் சமீந்தார் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர், காரைக்குடி அழகப்பா ஆசிரியப் பயிற்சிக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், திருப்பதிப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர், சென்னைத் தமிழ்க் கலைக்களஞ்சிய முதன்மைப் பதிப்பர் எனப் பல்வேறு பொறுப்புகளில் பல்லாண்டுக் காலம் சீரோடும் சிறப்போடும் பணியாற்றிய பெருமை டாக்டர் ந சுப்புரெட்டியார் அவர்களுக்கு உண்டு.

திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியபோது டாக்டர் ந. சுப்புரெட்டியார் முன்னின்று நடத்திய கருத்தரங்குகள் பலவாகும்; தம் பணிக்காலத்தின்போது அப்பல்கலைக்கழகத்தில் நான்கு அறக்கட்டளைகளை நிறுவிய பெருமையும் அவருக்கு உண்டு.

கல்வி, இலக்கியம், சமயம், தத்துவம், பயண இலக்கியம், தன் வரலாறு, வரலாறு, இலக்கியத் திறனாய்வு, அறிவியல் முதலான துறைகளில் எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்

An Error has crept in: Correct Date of Birth is 27 Aug 1916.

தளித்தவர் டாக்டர் ந. சுப்புரெட்டியார். அவருடைய நூல்களுள் ஐந்து நூல்கள் மாநில அரசின் பரிசுகளைப் பெற்றவை; இரண்டு நூல்கள் பிற இலக்கிய அமைப்புக்களின் பரிசுகளைப் பெற்றவை.

'தமிழ் பயிற்றும் முறை', 'அறிவியல் பயிற்றும் முறை', 'கவிதை பயிற்றும் முறை', 'கல்வி உளவியல்' என்பன பேராசிரியர் சுப்புரெட்டியாரின் கல்வித் துறை சார்ந்த நூல்களுள் குறிக்கத் தக்கன. 'கவிதை அனுபவம்', 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை', 'கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள்', 'புதுக்கவிதை நோக்கும் போக்கும்' என்பன இலக்கியத் திறனாய்வுத் துறைக்குப் பெருமை சேர்க்கும் பேராசிரியர் சுப்புரெட்டியாரின் நூல்கள் ஆகும். 'வைணவமும் தமிழும்', 'முத்தி நெறி', 'சில நோக்கில் நாலாயிரம்'- பேராசிரியர் சுப்புரெட்டியாரின் சமய, தத்துவ அறிவைப் பறை சாற்றும் நூல்கள் இவை. 'இல்லற நெறி', 'அறிவியல் விருந்து', 'மானிட உடல்' 'அணுவின் ஆக்கம்' முதலான நூல்களில் பேராசிரியர் சுப்புரெட்டியாரின் அறிவியல் புலமை சுடர்விட்டு திற்பதைக் காணலாம்

பறம்பு மலையில் நடைபெற்ற பாரி விழாவில் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களுக்கு 'அருங்கலைக்கோன்' என்ற விருது வழங்கப் பெற்றது. அவரது 61ஆம் பிறந்த நாளின்போது 800 பக்க அளவில் வெளியிடப்பெற்ற மலர், 85 கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்ட ஓர் அரிய ஆய்வுப் பெட்டகம் ஆகும். பிற மாநிலத்தில் தமிழ்க் கல்வியும் ஆய்வும் வளர வழி வகை செய்ததில் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. ஓய்வு பெற்ற பிறகும் அவர் தமிழக அரசின் நிதி உதவியோடு பல்வேறு நூல்களைப் படைத்துள்ளார்.

தமிழுக்குத் துறைதோறும் தொண்டாற்றியுள்ள டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களுக்குத் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' (1987) என்ற பட்டத்தினை வழங்கி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பெருமைப்படுகிறது.

பேராசிரியர் தமிழ்ப்பெரியார் முனைவர் ந.சுப்பு ரெட்டியார் கலைமாமணி விருது மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் கெளரவ முனைவர் பட்டமும் பெற்றமை குறித்து பாராட்டி எழுதிய வாழ்த்துப்பா

"பாரதிபித்தன்"

கடல் அலைகள் ஓயாது கரை தன்னைத்தேடுதல்போல்

கடல் அலையாய் எழுந்து தமிழ்க் கலைதன்னைத்தேடும்

கடல் எனவே பரந்ததமிழ்க் கடலாகும் பெரியோய்!

கடல் மடையே திறந்தெனவே இலக்கியத்தைப் பொழிந்தாய்!

கடல் மல்லைக் கலைச் செல்வம் காலம் வென்றாற்போல

கடல் அன்ன விரிந்த நின்றன் தமிழ்ப்பணியும் வெல்லும்!

கடல் கடந்தும் தமிழறஞர் சுப்பு ரெட்டி பெயர்விளங்கக்

கடல் பரந்தும் புகழ் மணக்கப் பாடுவனே பல்லாண்டு!

(2)

பல்லாண்டு பாடினார் பெரியாழ்வார் மாலவனைப்

பரிசாகப் பாண்டியனோ பொற்கிழியை ஈந்தான்!

பல்லாண்டு தமிழ்த் தொண்டே தொழிலாகப் புரிந்தாய்!

பார்புகழும் **கலைமாமணி** விருது பெற்றாய்

பல்லாண்டு சங்கம்வளர் மாமதுரை தனிலே

பல்கலைக் கழகமோ **முனைவர்** பட்டம் சூட்டியது!

பல்லாண்டு தமிழ்த் துறையில் புதுமைபல படைத்தாய்!

பலநூறு நூல் படைத்து பெருமையினைச் சேர்த்தாய்

சேர்த்தாய் நீ தமிழுக்கு "வைணவத்தின் செல்வம்"

தெளிவாகப் பெரியாரின் பகுத்தறிவும் பகர்ந்தாய்!

சேர்த்தாய் நின் மனதிற்கு உகந்ததென தமிழ்ப்பணியை

சீர்மல்கும் ஆய்ப்பாடி செல்வனுரை கீதையினைச்

சேர்த்தாய் நன் வாழ்முறைக்கு சிறந்ததொருதத்துவமாய்

"திரளும் பலன் தொண்டதனில் எதிர்பாரேன்" என்றே

சேர்த்தாய் செந்தமிழ்த் தாயக்கு திரண்ட செல்வம் அணியாக

திக்கெட்டும் புகழ் ஓங்க வாழ்த்தும் எனதுளமே!

(4)

உளமரங்கில் வேங்கடவன் திருப்பாதம் நாட்டும்

உணர்வெல்லாம் வண்டாகித் தமிழ்த் தேனைக் கூட்டும்

உளமரங்கில் அன்பு செய்து நண்பர்களைச் சேர்க்கும்

உரை செய்யும் திறனாலே அறிஞர்களை ஈர்க்கும்

உளமரங்கில் எளிமையே இயல்பாக எண்ணும்

உரமுடனே மனத்திடபம் "இருநிலை"யை ஏற்கும்

உளம் என்றும் உழைப்பிற்கு ஓய்வளிக்க மறுக்கும்

ஓயாதுன் பணிதொடரப் போற்றுவனே "பாரதிபித்தன்"

வாழ்க தமிழறிஞர் சுப்பு ரெட்டியார் வாழ்க வாழ்கவே!

நாள் - 19.12.1999

இடம் - வள்ளியம்மாள் 1மகளிர் கல்லூரி
சென்னை–102.

பாரதிப்பித்தன் கவிஞர்
கோ.வே. இராமச்சந்திரன்
அண்ணாநகர்,
சென்னை - 101.

Awards

Professor's enduring contribution to the cause of Tamil development and education have been repeatedly acknowledged and appreciated by various organizations, including Government of Tamil Nadu and they honoured him with several awards.

<table>
<tr><th>S.No.</th><th>Institution/Organization who honored</th><th>Name of the Award</th><th>Year</th></tr>
<tr><td>01</td><td>Dina Thanti Trust, Chennai, Tamilnadu</td><td>CP Aadhithanar Award</td><td>2001</td></tr>
<tr><td>02</td><td>Madurai-Kamaraj University, Madurai, Tamilnadu</td><td>D.Litt</td><td>1999</td></tr>
<tr><td>03</td><td>Alwar Research Centre, Chennai, Tamilnadu</td><td>Ramanujar Award</td><td>1996</td></tr>
<tr><td>04</td><td>Kamban Kazhagam, Chennai, Tamilnadu</td><td>Prof Radhakrishnan Award</td><td rowspan="2">1994</td></tr>
<tr><td>05</td><td>Raja Sir Annamalai Chettiar Trust, Chennai, Tamilnadu</td><td>Raja Sir Muthiah Chettiar Award</td></tr>
<tr><td>06</td><td>World Thirukkural Research Centre</td><td>Thirukkural Award</td><td>1992</td></tr>
<tr><td>07</td><td>Government of Tamilnadu</td><td>Thiru Vi Ka Award</td><td>1985</td></tr>
</table>

Doctor of Literature [*honoris causa*]

MADURAI KAMARAJ UNIVERSITY

WE, THE CHANCELLOR, VICE-CHANCELLOR
AND MEMBERS OF THE SENATE OF THE MADURAI KAMARAJ UNIVERSITY
DO HEREBY PROCLAIM AND MAKE KNOWN THAT
THE DEGREE OF DOCTOR OF LITERATURE (honoris causa)
HAS BEEN CONFERRED ON

THIRU N. SUBBU REDDIAR

AT THE THIRTY THIRD ANNUAL CONVOCATION
HELD ON 22ND NOVEMBER 1999
GIVEN UNDER THE SEAL OF THE MADURAI KAMARAJ UNIVERSITY

UNIVERSITY BUILDINGS
MADURAI
22ND NOVEMBER 1999

CHANCELLOR

MADURAI KAMARAJ UNIVERSITY
MADURAI

THIRTY THIRD ANNUAL CONVOCATION
22nd NOVEMBER 1999

CITATION
PRESENTED
BY
PROF. M. SALIHU
VICE-CHANCELLOR
AT
THE TIME
OF
THE CONFERMENT
OF
THE DEGREE OF
DOCTOR OF LITERATURE
HONORIS CAUSA
ON
Dr. N. Subbu Reddiar

It gives me immense pleasure to present unto you, Madam Chancellor, Dr. N. Subbu Reddiar.

Born on August 27, 1916 he passed his B.Sc. (Chemistry) with first class, securing the third position. A Tamil Vidwan, he secured the second rank both in his B.A. and M.A. Tamil. His research work on Vaishnavism immensely contributed to the field of Tamil literature.

This eminent scholar was conferred many honours like 'Arunkalaikan', 'Sri Sadagopanponnadi', 'Professor Emeritus', 'Tamil Peravai Chemmal', Thiru Vi. Ka. Award, Rajah Sir Muthiah Chettiar Award etc.

He has written 116 books towards the enrichment of Tamil covering varied areas like Literature, Religion, Philosophy, Literary Criticism, Popular Science, Research, Biography, Autobiography, Educational Technology and Psychology. His vast contribution starts from 1940 and spreads upto the present year 1999. We hope the new millennium will be blessed with more of his contributions.

Our distinguished personality started his career as a Founder-Headmaster of a High School at Turaiyur, Trichy District and served for 9 years. He served for 10 years as Professor and Head of the Dept. of Tamil in a Teachers' Training College at Karaikudi. He was the Founder-Professor and Head of the Dept. of Tamil in Sri Venkateswara University, Tirupathi for 17 years. As Chief Editor for 16 months, he contributed his service towards the work on Tamil Encyclopaedia, Tamil Academy, Chennai. For a span of 18 months, he served as the Emeritus Professor in the Centre for Philosophy, Tamil University, Thanjavur.

At present apart from serving as Professor Emeritus for life in the Dept. of Tamil Literature, University of Madras and as Director of the Institute of Traditional Cultures of South and South East Asia, he keeps himself busy in reading, doing research, writing and publishing.

Some of his major-award works are :

Kavithai Anubhavam (1961)
Saiva Samayam Vilakku (1984)

Malarum Ninaivukal (1989) Biography
Parakaalan Painthamizh (1992)
Vin Veli -p-payanam (1996)

He has been awarded prizes by the Government of Tamilnadu, the Tamil Academy and the University of Madras.

He served as a member of various Academic Councils and Government committees.

Finally to highlight his generous nature I would like to mention his endowments, Rs. 25,000 in the Dept. of Tamil, Sri Venkateswara University, Tirupathi, Rs. 25,000 in the Dept. of Tamil Literature, the University of Madras and Rs. 25,000 in the Dept. of Saiva Siddhanta, the University of Madras, Chennai.

Dr. N. Subbu Reddiar, a leading and distinguished scholar, is recommended by the Syndicate and the Senate of the Madurai Kamaraj University to receive the Degree of Doctor of Literature *(honoris causa)* to which, Madam, I pray, he be admitted.

சி. பா. ஆதித்தனார் மூத்த தமிழறிஞர் விருது



நிகழ்ச்சி நிரல்

மாலை 6 மணி :

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை :

டாக்டர் **பா. சிவந்தி ஆதித்தன்** அவர்கள்

நடுவர்கள்
வாழ்த்துரை :

நீதியரசர் **பொன்.பாஸ்கரன்** அவர்கள்
(சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் -
சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு -
நஷ்ட ஈடு குழுமத் தலைவர்)

முனைவர் **ஆ.நடராசன்** அவர்கள்
(சென்னை தொலைக்காட்சி நிலைய முன்னாள்
இயக்குநர்)

தலைமை உரை,
பரிசுகள் வழங்குதல் :

சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்
மேன்மைமிகு **ஆ.குலசேகரன்** அவர்கள்

ஏற்புரை :

பேராசிரியர் டாக்டர் **ந.சுப்புரெட்டியார்** அவர்கள்

கலைமாமணி டாக்டர் **வாசவன்** அவர்கள்

நன்றியுரை

"தமிழர் தந்தை" சி.பா.ஆதித்தனார்
97-வது பிறந்த நாள்
இலக்கியப் பரிசளிப்பு விழா

அன்புடையீர்,

தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் அவர்களின்
97-வது பிறந்த நாள் இலக்கியப் பரிசளிப்பு விழா

சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்
மேன்மைமிகு **ஆ. குலசேகரன்** அவர்கள்
தலைமையில்

27-9-2001 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு
சென்னை அண்ணாசாலையில் உள்ள
ராணி சீதை மன்றத்தில் நடைபெற இருக்கிறது.

இவ்விழாவில்,
"சி.பா. ஆதித்தனார் மூத்த தமிழறிஞர் விருது"
ஒரு லட்சம் ரூபாய்
பேராசிரியர் டாக்டர் **ந.சுப்புரெட்டியார்** அவர்களுக்கு
வழங்கப்படும்.

"சி.பா. ஆதித்தனார் இலக்கியப் பரிசு"
50 ஆயிரம் ரூபாய்
'கலைமாமணி' டாக்டர் **வாசவன்** அவர்களுக்கு
"நெல்லுச்சோறு" என்ற நாவலுக்காக வழங்கப்படும்.

தாங்கள் விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்கும்படி
அன்புடன் அழைக்கிறோம்.

டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன்,
இயக்குநர்,
"தினத்தந்தி".

திருக்குறள் விருது

உலகத் திருக்குறள் உயராய்வு மையம்

(30, வேங்கடரங்கம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005)

நிறுவனர்

குறள்ஞானி, குறள்ஞாயிறு, குறள்முரசு, முப்பால் பேரொளி, முப்பால் மாமணி, இளம் வள்ளுவர், தமிழ்மறைச் செம்மல், வள்ளுவச் செல்வர், குறள்நெறிச் சான்றோர், திருக்குறள் நெறித் தோன்றல்

பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு

B.Sc., M.A., Ph.D., D.Anth., D.Geog., D.H.Ed. Cert. - Skt., Cert. - Ling., Cert. - Lx.,

"திருக்குறள்" விருது

உலகத் திருக்குறள் உயராய்வு மையத்தின் இயக்குநராகி, மேலும் முனைப்போடு திருக்குறள் தொண்டாற்றுவதற்குத் தம்மை ஈகம் செய்துள்ள,

முனைவர் ந. சுப்புரெட்டியார்

அவர்களைப் பாராட்டி, அன்னாருக்கு 1992-ஆம் ஆண்டுக்கான

திருக்குறள்

விருது வழங்கிச் சிறப்பிக்கின்றோம்

'திருக்குறள்' சாந்தி மோகனராசு நிறுவனர்	'திருக்குறள்' சோ. கருப்பசாமி தலைமையக மேலாண்மை இயக்குநர்	மாவட்டத் தலைமை மேலாண்மை இயக்குநர்

Prizes

Government of Tamilnadu and University of Madras had honoured the Professor by selecting and awarding PRIZES to some of his books, both in the fields of Science as well as Tamil literature.

S.No.	Name of the Book	Year	Awarded by
01	Bharatheeyam	1983	Government of Tamilnadu
02	Muthineri	1982	Government of Tamilnadu
03	Chola Naatu Thirupathikal - Part I	1981	Government of Tamilnadu
04	Namadhu Udhal	1966	Government of Tamilnadu
05	Anukkaru Bhautheekam		University of Madras
06	Raackettugal [Rockets]	1964	Government of Tamilnadu
07	Ariviyal Virundhu	1962	Dept of Tamil Development, Government of Tamilnadu

தமிழ் வளர்ச்சித் துறை

சான்றிதழ்

தமிழ் வளர்ச்சித் துறை

சான்றிதழ்

Dr. Reddiar receiving Rs. 1000/- award of Tamilnadu Govt. for his book 'Rockcts' from Dr. Navalar Neduncheziyan, Minister for Education, 14 January 1969

Titles

Several charitable and other organizations including Government of Tamilnadu had conferred TITLES and honoured the Professor for his life time contribution to the development of Tamil.

S.No.	Year	Name of the Title	Felicitated by
01	2003	Tamizh Vaagai Chemmal	Salem Tamil Sangam, Salem,Tamilnadu
02	2002	Podhu Marai Chemmal	Guru Palani Adheenam Tirukkural Peetam, Maduranthakam
03	2001	Aaivu Thamilarasu	Thiruperunthiru Somasundarar Guruvarul Arutpa Mandram, New Washermanpet, Chennai,Tamilnadu
04	1999	Seva Rathna	Centenary Committee Kanchi Periyavar
05		Kalaimamani	Government of Tamilnadu
06	1993	Tamil Peravai Chemmal	Madurai-Kamaraj University, Madurai, Tamilnadu
07		Sri Sadagopan Ponnadi	Sri Vainava Sabhai, Pantruti, Tamilnadu
08	1992	Thirukural Urai Chemmal	World Thirukkural Research Centre, Triplicane, Chennai, Tamilnadu
09	1969	Arunkalaikon	Thiruvannamalai Kundrakudi Adheenam, Kundrakudi, Tamilnadu

உலகத் திருக்குறள் மையம்

(தோற்றம் கி.பி.13.4.90,தி.பி.31.12.2021)

30, வேங்கடரங்கம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. தொ.பே. 8542753

நிறுவனர்

தமிழ்நாடு அரசின் "திருவள்ளுவர் விருது"பெற்ற உலகின் முதல் திருக்குறள் தலைமைத் தூதர்

குறள்ஞானி பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு

B.Sc., M.A., Ph.D., D.Anth.,D.Geog., D.H.Ed., Cert.,Skt., Cert.-Ling.,Cert.-Lx.,

திருக்குறள் உரைச் செம்மல்

1990-களில் திருக்குறளுக்குப் புதிய உரை எழுதி உலகப் பொதுமறையாம் திருக்குறளுக்குப் பெருமை சேர்த்த,

பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

அவர்களுக்குத்

திருக்குறள் உரைச் செம்மல்

என்னும் விருது வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.
இவர் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

அருள்திரு திருக்குறள் தூதர்
சாந்தி மோகனராசு, நிறுவனர்

அருள்திரு திருக்குறள் தலைமைத் தூதர்
பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின் (குறள் - 666)

THE CENTENARIAN TRUST

CHENNAI 600 017

Seva Ratna Award 1999

Presented by

'BHARAT RATNA' Hon. Sri C. SUBRAMANIAM

Former Governor of Maharashtra

to

Dr. N. SUBBU REDDIAR

CITATION

'Professor Emeritus in the Tamil Department of Madras University, Director, Institute of Traditional Culture, seasoned Professor, Editor, Researcher in the field of religion, author of 120 *books out of which nine won awards, has served on a number of Academic and Expert bodies, delivered a number of endowment lectures at Universities'.*

K. BADRINARAYAN, *Chairman*
KAMLESHWAR DAYAL BHARGAVA, *Managing Trustee*
Prof. K.S. NAGARAJAN, *Secretary*

31.12.1999

Dr. K. VENKATASUBRAMANIAN
Member, Union Planning Commission,
Executive Vice Chairman, The Centenarian Trust

Conferment of title 'Arunkalaikkon' at the Paari Festival in Parambumalai by Dr. Kalaignar M. Karunanidhi, April 1969.

தமிழ்ப் பேரவைச் செம்மல்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

தமிழ்ச் செம்மல்கள் பேரவை

தமிழகக் கல்வி அமைச்சர், இணைவேந்தர், மாண்புமிகு

திரு. இராம. வீரப்பன் அவர்கள்

டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கட்குத்

'தமிழ்ப் பேரவைச் செம்மல்'

என்ற பட்டத்தினையும் பொற்பதக்கத்தினையும் நல்கித்

தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு

திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள்

பொன்னாடை போர்த்திச்

சிறப்புச் செய்த ஞான்று

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

பேராசிரியர் டாக்டர் மா. இலட்சுமணன் அவர்கள்

படித்தளித்த தகுதியுரை

தி.வ. ௨0௨௨, புரட்டாசி ௧௧, வியாழக்கிழமை 17—10—1991

கலைமாமணி


தமிழ் நாடு
இயல் இசை
நாடக மன்றம்
கலைமாமணி
விருது வழங்கும் விழா
கலைமாமணி
விருது
1999
சிறப்பு மலர் 1999

Tributes - ENGLISH

[a] Academicians

Prof MV Ramasharma, Professor of English, Sri Venkateswara University [SVU], Tirupathi

"........Professor N Subbu Reddiar is a prolific writer. His work is comprehensive and deals with science, politics, religion and literature. His contribution to Tamil literature and literary criticism is vast and immense...."

Prof GN Reddy, Professor of Telugu, SVU

"... Prof N Subbu Reddiar has carved himself a unique place in the modern Tamil literature both as a scholar and a prolific writer. His writings which are well-known extends to different areas like criticism, education, grammar, philosophy, modern science, etc. ..."

Prof PV Arunachalam, Professor of Mathematics, SVU

"..... We always remember how Prof Reddiar worked to buildup the Tamil department of our University....."

Prof K Gopichand, Professor of Electrical Engineering, SVU Collge of Engg

"... Company of Prof Dr N Subbu Reddiar with a smile always is ever memorable. Amongst linguistic scholars, there are very few who will accord equality, in all languages, but our Dr N Subbu Reddiar is an exception. His interest ranges from science, mathematics, medicine to technology...."

Prof N Balakrishna Reddy, Professor of Geography, SVU

".... Prof N Subbu Reddiar is a devoted teacher, a distinguished scholar, an eminent academician and a popular man of letters. His versatile genius is reflected, in his scintillating contributions touching almost every branches of Tamil literature ranging from literary criticism to poetry, and religions philosophy to science..."

Prof Sohanlal Nagda, Professor of Population Studies, SVU

"....Prof Reddiar's contributions to the field of research, literature, literary criticism, science, education and teaching are commendable....."

Prof IM Rao, Professor of Botany, SVU

".... After a brilliant academic career, Prof Reddiar as a Headmaster of a High School, teaching mathematics and science subjects and ended his professional career as Professor and Head of the Dept of Tamil in a University..."

Prof ER Sreekrishna Sarma, Professor of Sanskrit, SVU

"... Prof Reddiar dedicated himself to the tireless service of the University for the last seventeen years. The large number of works in various fields of discipline, such as humanities, science reveals his versatile genius and hard work..."

Prof VR Krishnan, Professor of Chemistry, SVU

"... Prof Reddiar's services to this University and for the advancement of the cause of Post-Graduate education and research beyond the borders of Tamilnadu will be remembered with gratitude.... His erudition and scholarship and his productivity have won the admiration of his students, colleagues and vast reading public, the new-literates of Tamil. His distinguished career has been intensely fruitful...."

Prof MP Sastry, Professor of Statistics, SVU

"... Prof Reddiar is an eminent scholar in Tamil. He wrote several popular books on various intricate scientific topics and got awards from University and government...."

Prof S Narayana Rao, Professor of Psychology, SVU

"...I feel that very few people have had the good fortune of achieving the precious goals of life as Prof Reddiar did. He can rightly take the pride in the contribution that he made to scientific literature in Tamil language. As a prolific writer he brought to the common man the wisdom and knowledge that was not available in his mother tongue...."

Prof K Sitaram, Professor of Mathematics, SVU

".... Prof Reddiar founded and built up the Dept of Tamil in this University. I observe that in his conversation he is given to explaining things in minute details. I think that this is probably the strong point of his writings...."

Prof ST Narasimhachari, Professor of Hindi, SVU

".... Prof Reddiar is a great scholar in Tamil language and literature. He has done creditable work in this field and will be remembered for his qualitative and quantitative contributions. His interests are varied and include philosophy, teaching methods and popular science....."

Dr BRK Rao, Reader in Economics, SVU

"... As a teacher and researcher Prof Reddiar has earned many laurels. He is a man of sterling character benevolent conduct and cosmopolitan outlook and literal in nature......"

Prof VM Reddi, Professor of History, SVU

".....Prof Reddiar is a scholar or rare eminence; his contribution to the promotion of Tamil literature is impressive. His grasp of whatever subject he has chosen for study, whether science or literature, philosophy and literary criticism, religion or education and the facility of expression are such that he can rise to heights to impress a scholar and at the same time can come on par with a layman to convey his ideas. The many awards he received bear testimony to these qualities....."

Dr SS Subramanian, Reader in Mathematics, SVU College of Engg

"....Prof N Subbu Reddiar is a voracious reader and voluminous writer of quality in Tamil; he did not touch anything that did not adorn in Tamil language and literature....."

Prof G Leelakrishnan, Professor of Botany, Sri Govindarajaswamy College, Tirupathi

"... Many have clucked their tongues about Dr Reddiar's highly diversified subject matter in writing....."

Prof B Rama Raju, Professor of Telugu, Osmani University

"... I have the good fortune of knowing him intimately during the several All India Oriental Conference Sessions and University meetings. Besides being an eminent scholar, Dr Reddiar is sound researcher and a true guide in the full sense of the term....."

Prof M Shanmugam Pillai, Professor of Tamil, Madurai-Kamaraj University

"... Professor Reddiar's interest is wide and varied. He has published practically on every subjects, on education, science, literature, literary criticism, Vaishnava philosophy, etc. He is responsible to establish a Dept of Tamil at Sri Venkateswara University, Tirupathi...."

Prof KK Raja, Professor of Sanskrit, University of Madras

"... Prof Reddiar is a well-known scholar in Tamil language and literature, and a prolific writer of topics covering a wide range of Indian culture...."

Prof VP Singh, Professor of Hindi, Benaras Hindu University, Varanasi

"... I have been knowing Prof Reddiar for the last 15 years. He is really a most distinguished scholar, teacher and writer of Tamil. He is a many sided genius. Besides literature, he has written books on religion, philosophy and science...."

Prof K Rangaswami Ayyengar, Professor of Botany, Annamalai University

"... Prof Reddiar is a multifaceted personality having contributed to science, philosophy and religion. His greatest contribution is his facile pen by which he has interpreted profoundest thoughts in science in simple and intelligible Tamil....."

Dr A Chidambaranatha Chettiar, Chief Editor, English-Tamil Dictionary, University of Madras

"... I agree with the author that students have to be taught the way in which they should approach poetry and the way in which they can appreciate poetry. I am sure that a perusal of this book will help hundreds

of students of literature to enjoy poetry better. Any book that enhances our delight in that direction is a welcome addition...."

****

[b] Educational Administrators

Prof P Jayarama Reddy, Vice-Chancellor, SVU

"...... Prof Reddiar has a distinguished and fruitful career extending over three decades and has established himself as an eminent scholar in Tamil literature. Prof Reddiar's writings are versatile and include scientific and philosophic theme. But for his efforts, the Tamil Department in this University would not have come up the present level...."

Prof SVJ Lakshman, Vice-Chancellor, SVU

"... Prof Reddiar is a founder of the Tamil Department in this University. I have always great appreciation for his harad work and intelligence....."

Prof Sathish Chandra, Chairman, University Grants Commission

".... Prof N Subbu Reddiar's services to the Tamil language and literature are well-known to the people of the South...."

Dr S Ramachanra Rao, Vice-Chairman, UGC

"... Prof Dr Reddiar is the most distinguished scholar, teacher and writer of Tamil. His services as Tamil Professor especially his founding and running of PG and Research Department of Tamil as its Head at Sri Venkateswara University and his contribution to literature criticism, especially his study of poetry and religious philosophy and experience of the Alvars are invaluable...."

Prof K Sachithananda Moorthy, Vice-Chancellor, SVU

"... Prof Reddiar has written much and has also taught for many years at various levels. He has made a special study of Nammalvar and his *magnum opus* is Nammalvar's thought.... He had an important role in Sri Venkateswara University obtaining grant from Tamilnadu Government for the Tamil Department....."

Dr D Jagannatha Reddy, Vice-Chancellor, SVU

".... Prof Reddiar has indefatigable energy and infectious enthusiasm in organizing academic programmes. He delights in the revival, publicity and enlightening of Tamil literature to the youth as well as to the elders by periodically convening seminars wherein giants and Pulavars in Tamil are enjoyed to participate, thus making Sri Venkateswara Senate Hall a place of pilgrimage as well as a forum for dialogue, debate and recital... Prof Reddiar is a multifaceted personality. He typifies Tamilian culture by wearing the mantle of humility under which his immense treasure of Tamil literature is stocked...."

Dr VC Vaman Rao, Vice-Chancellor, SVU

".... Dr Reddiar is a silent and devoted worker in the field of Tamil language and literature and he does not make any show of his scholarship or erudition. He is all humility and reminds of the great Vaishnavite saint, Nammalvar, who, after realization said, "Oh, Lord, now I find that "I" and 'Mine' are only 'Thee' and 'Thine' .....'

Thiru TM Narayanaswami Pillai, Vice-Chancellor, Annamalai University

"... Prof Reddiar is a brilliant example of one, who has risen from the bottom of teaching profession to the top of it in a distinguished university by his ability, character and unremitting work. His life has been of dedication in Tamil; he is a profound scholar who has done valuable research. ...."

Dr Malcolm S Adiseshiah, Vice-Chancellor, University of Madras

"..... Professor Reddiar is a renowned scholar in Tamilology with a good background of science. To his credit he has brought several worthy volumes on different spheres - literature, literary criticism, grammar, religion and education...."

Prof SV Chittibabu, Vice-Chancellor, Madurai-Kamaraj & Annamalai Universities

"......Dr Reddiar is known all over Tamilnadu as an erudite Tamil scholar. Born in a middle class family he has attained fame by dint of his inherent merit and hard labour... His books on science, philosophy, grammar, etc bear stamp of his lucidity of expression, vastness of style and richness of ideas. ..."

Prof MK Ramakrishnan, Registrar, SVU

"... over the past years Prof Reddiar has written valuable works on literature, literary criticism, education and teaching, many of his publications bagging coveted awards from the Govt of Tamilnadu and University of Madras... It could be said of Reddiar that he was the founder-professor of Tamil in Sri Venkateswara University. It was due to his untiring efforts, his selfless and successful liaison work with the Govt of Tamilnadu that the Dept of Tamil in the University came into being. I have watched with admiration the unflagging zeal and enthusiasm with which Prof Reddiar built up the Department brick by brick and brought it to this level of eminence. ..."

Sri M Balarama Reddy, Syndicate Member, SVU

"... Dr N Subbu Reddiar is an acclaimed academician in the Tamil world, with very many publications to his credit. The awards and prizes he got for his publications will speak about his rare ability. His ability to make the most obtuse matter into easily understandable language even to the laymen is most admirable. .."

Sri Anam Sanjeeva Reddy, Syndicate Member, SVU

".... Prof Reddiar is a distinguished Tamil scholar and professor; and he has done yeomen service to the cause of Tamil learning, and his writings by way of literary interpretation, popular science, philosophy and devotional expositions are an enduring witness to this achievements....."

Dr S Subramaniam, Director, International Institute of Tamil Studies, Taramani, Chennai - 600 113

".... Dr N Subbu Reddiar is one of the great scholars in Tamil. He has contributed books on different subjects in Tamil. His publications consist of scientific works, literary works, literary theories, literary criticism etc. He is an unassuming type of man with good and sympathetic heart to all people he comes across. He is liked by everybody who comes in contact with him. ...."

Dr TB Siddalingiah, Director, Institute of Correspondence Course & Continuing Education, University of Madras

".... A versatile genius, as Dr Reddiar is, he has published a number of books on various topics. He has touched every aspect of Tamil literature, poetry, short stories, literary appreciation and interpretation and literary criticism. His writings on science subjects are real contribution to Tamil education and teaching methods have also been his interest for long. ...."

Prof KR Srinivasa Aiyengar, Vice-Chancellor, Andhra University

"...........As a teacher too, he has accumulated a body of variegated experience ranging from the Headmastership of the Thuraiyur High School to the Headship of the Department of Tamil Studies in Sri Venkateswara University, Tirupati. Scholar, teacher, organizer of teaching, savant in Tamil language and literature, disseminator of knowledge about Vaishnava religion and philosophy, and well-informed and animated guide to the hundred hallowed Vaishnava shrines in South India, Prof Subbu Reddiar is a man of many parts, and these facets of his learning and personality stand revealed in the present collection of 27 papers, which is really a selection from a corpus comprising more than double the number...."

****

Tributes

தமிழ்

Prof. V.I. Subramanian, Professor of Linguistics, University of Kerala.

‘‘. . . . நண்பர் சுப்புரெட்டியார் தமிழ்த்தொண்டால் வளர்ந்தவர்; தமிழ்ப்பற்றால் மேலோங்கியவர். தன்னலத்தைவிடத் தமிழ்நலத்தைப் பெரிதாகப் பேணியவர். . . . திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம்.ஏ. வகுப்புக் கொணர்ந்ததும், பலநூல்களை வெளியிட்டதும், வெளியிடுவதற்குத் துணைநின்றதும் அவர் செய்த ஆக்கவேலைகளில் சிலவாகும்.’’

டாக்டர் வ.சு.ப. மாணிக்கம், தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

டாக்டர் ந. சுப்புரெட்டியார் கல்வித்துறையில் உழைப்பால் உயர்ந்த தமிழ்ப் பேராசிரியர். தமிழோடு பலதுறையறிவு வாய்க்கப்பெற்றவர். தமிழில் உயரிய அறிவியல் நூல்களை எழுதி ஆக்கம் செய்தவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் அறிவியல் நோக்கில் ஆய்ந்தவர். . . சுவைபட உரையாடும் தன்மை வாய்ந்தவர். மனம் திறந்து உரையாடும் தன்மையர். எண்ணியதை எதிர்த்து முடிக்கவல்ல திண்ணியர். மாணவர்பால் நன்மதிப்புக்கொண்டவர். . .’’

டாக்டர் ந. சஞ்சீவி, தமிழ்ப் பேராசிரியர் (இலக்கியத்துறை)
சென்னைப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் முப்பால் பெரியார். அறம், பொருள், இன்பம் மூன்றுக்கும் உரியர். பேராசிரியர் ரெட்டியார் நன்றி உணர்வு நிறைந்தவர். நடுநிலை பிறழாதவர். பிறழ்ந்தாலும் கனவாலும் பிறர்க்குத் தீமைபுரியாத கருங்கடல், திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை அவர் உருவாக்கியிருக்கும் - திருவாக்கியிருக்கும் உறன், திறன் - வியந்து வியந்து மகிழ்ந்து போற்றுதற்குரியது. . .’’

டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், தமிழ்ப் பேராசிரியர், (மொழித்துறை)
சென்னைப் பல்கலைக்கழகம்

''...... பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியாரைத் தமிழ்கூறு நல்லுலகம் நன்கு அறியும்.... அறிவியலைத் தமிழ்மொழி வாயிலாக அவனிக்கு அறிவிக்கும் தனிப்பெருந்திறம் படைத்தவராக விளங்குபவர், பல்வேறு வகை நூல்களைத் தமிழுக்குத் தந்தவர். தனித்த உரையாடலிலும் பிறர் மகிழப் பேசுபவர். இவர் இருக்கிற இடத்தில் மகிழ்ச்சி களிநடம் புரியும்...''

முனைவர் சாலை இளந்திரையன், தமிழ்ப்பேராசிரியர், தில்லி பல்கலைக்கழகம்

''...... நண்பர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களை நினைக்குந்தோறும் அவரது இடையறாத பணி எழுச்சியே எங்கள் நெஞ்சில் எழுகின்றது. மாரியாயினும் கோடையாயினும் வற்றாது பொங்கிப்பாயும் ''தெண்ணீர்ச் சுனைபோல்'' எந்த நிலையிலும் ஏதாவது செய்துகொண்டே இருக்கும் இயல்பினர்...''

தவத்திரு குன்றக்குடி அடிகளார்; திருவண்ணாமலை ஆதினம்,
குன்றக்குடி, பசும்பொன்தேவர் மாவட்டம்

. . . .

நூலறி புலவன்; நுண்ணறி வாலின்
ஆய்வுறு கலைகள் அனைத்தையும் ஆய்ந்த
அறிவியல் மேதை; ''அருங்கலைக் கோன்'' அவன்
அழகு தமிழினில் அறிவியல் கலையினைத்
தந்த தகைசால் கவினுறு கலைஞன்
எழுத்திலும் பேச்சிலும் வெல்வா நிலாதான்
அடக்கமும் பண்பும் அமைந்த சால்பினன்

. . . .

தவத்திரு காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள், திருப்பனந்தாள்,
தஞ்சை மாவட்டம்

பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்களைத் தெரியாத தமிழறிவு படைத்தோர் எவரும் இலர். முப்பதாண்டுகட்கு மேலாக அவர் மிகச்சிறந்த பல நூல்களை ஆக்கி வெளியிடுதலாலும் பிற, பல பிரபல - தமிழ்ப்பணிகளாலும் அவர் அறிஞர்களின் கௌரவத்துக்குரியவராக விளங்கிவருகின்றார்கள்.....

தவத்திரு கணபதிசுவாமி, வேதாந்த மடம், புனல்வாசல், தஞ்சை மாவட்டம்

. . . .

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப் பியத்தினைப்
பல்கால் பயின்று பயனுறு ஆய்வு
திறம்படச் செய்து நறுஞ்செயல் ஓர்ந்து

வேங்கடவன் அருளிய ஓங்கிய கழகம்
‘பண்டாரகர்’ என்னும் பண்புசால் பட்டம்
வழங்கிச் சிறப்பினைத் தழீஇக் கொண்டது
அமிழ்தினினும் இனிய தமிழினில் அமைந்த
இலக்கிய நூல்களில் இனிமை தொன்மை
ஆழம் அகலம் அருமை பெருமையை
நுண்மாண் புலங்கொடு நுண்ணிதின் ஆய்ந்து
கற்பவர் மனங்கொளப் பற்பல பனுவல்
ஆக்கித் தமிழர்க் களித்து மகிழ்ந்தாய்!
. . . .

தருமையாதீனம் தவத்திரு சண்முகதேசிக பரமாச்சாரிய சுவாமிகள், தருமபுரம் (மயிலாடுதுறை)

. . . . . பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் நாடறிந்த நல்ல தமிழறிஞர். வாழ்நாளில் பெரும்பகுதியைத் தமிழ் வளர்ச்சிக்கே செலவிட்ட பெருமை அவருக்கு உண்டு. திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ் உயர்கல்வித்துறையும் தமிழ் ஆராய்ச்சித்துறையும் தோன்ற பெருமுயற்சி மேற்கொண்ட பெருமை, திரு ரெட்டியார் அவர்களுக்கு உண்டு. . . . .

திரு. மு. சண்முகம் பிள்ளை, திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி,
சென்னைப் பல்கலைக்கழகம்

. . . . . . தாம் கற்றுக் கைவந்த இலக்கண இலக்கிய அறிவியல் துறைகளில் பற்பல நூல்களை ஆக்கித் தந்திருக்கிறார்கள். திருமால் திருப்பதிகளைப் பற்றித் தாம் எழுதிய நூல்களில் ஒவ்வொரு தலத்திற்கும் நேரில் சென்று கண்டு அறிந்து பல செய்திகளையும் தொகுத்துத் தந்திருப்பது அவருடைய செம்மையான ஆய்வுநெறியை நன்கு எடுத்துக்காட்டும்.

டாக்டர் சி. திருமேனி, தமிழ்ப் பேராசிரியர், தேசிய கல்லூரி, திருச்சி

டாக்டர் ரெட்டியார் பலதிறப்பட்ட புலமை நலம் சான்றவர். பிறப்பாலும் வளர்ப்பாலும் செய்த ஆராய்ச்சியாலும் வைணவ சமயத்திலும் பிரபந்தத்திலும் எல்லையிலா பற்றும் ஆர்வமும் மிக்கவர்.... அறிவியல் துறையிலும் கல்வித் துறையிலும் தனித்த திறம் படைத்தவர்.

திரு. கி. வேங்கடசாமி ரெட்டியார், விபுதூர், தென்னாற்காடு மாவட்டம்

இலக்கணமா? இலக்கியமா? இயல்விஞ் ஞான
எழிற்கலையா? உளநூலா? எதிலும் வல்லான்
கலக்கமிலா தாராய்ச்சி முடிவு காட்டிக்
களிப்புறுவோன்; அறிஞரெலாம் கருத வாழ்வோன்;
புலக்கண்உற உரைகாண்பான்; நூலும் காண்பான்;

போதகா சிறியனுமாய்ப் போந்தான் கண்டீர்;
தலக்கணிவன் தனக்குநிகர் தானாய் நின்ற
சான்றோன்காண் சுப்புரெட்டி என்பான் மன்னோ.

திரு. பெ. இராமாநுச ரெட்டியார், தேவானூர், திருச்சி மாவட்டம்

தன்னையொரு தமிழ்த்தும்பி என்றே அன்று
சாற்றிஎம் சுப்புஎனும் தகைமை யாளன்
சொன்னதிலோர் சுவைகண்டேன் பேதைத் தும்பி
துழாவிபல மலர்தேடித் தேனைச் சேர்த்து
என்னே! தான் துய்க்காது பறிகொ டுக்கும்
ஏழைமைபோல் அன்றியிவர் தாமும் துய்த்து
மன்னுலகில் என்போல்வார் தெவிட்டா துண்ண
வழங்கிவரும் வளமைக்கோர் வரம்பும் உண்டோ?

தன்னிலைமை தானறியாத் தன்மை யாளன்;
சாதிவெறி சமயவெறி சற்று மில்லான்;
துன்னியநல் சைவகுலத் தோன்ற லேனும்
தூயதிருக் கச்சிநகர் அண்ணங் கரராம
மன்னியவாச் சாரியரின் மலர்த்தாள் போற்றி
வைணவத்தின் வளமனைத்தும் உணரப் பெற்றோம்;
பன்னியதை ஏட்டினைலே பரவச் செய்தான்
பலவுரைத்தேன்? அவன்திறனைப் பகரல் ஆற்றேன்.

புலவர் த. பெரியாண்டவன், மொழிபெயர்ப்புத்துறை, தனி அலுவலர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம், குறளகம், சென்னை - 108

உளவியல் நூல்கள் செய்தார்
உயர்விண்ணின் பயணம் சொன்னார்
அளந்திர இயலா துள்ள
அணுநுட்ப விளக்கம் சொன்னார்
தெளிந்திட அறிவு நூல்கள்
துறைதோறும் குவித்துத் தந்தார்
களிதரும் கவி நூல் கற்றுத்
திறனாய்வு நூல்கள் தந்தார்.

திரு. கி.வா. ஜகந்நாதன், கலைமகள் ஆசிரியர், மயிலை, சென்னை - 600 004

தண்டமிழ்ப் புலமை சார்தரு அறிஞன்
தகமில மாணவர் கல்வி
மண்டுறச் செய்யும் ஆசிரி யன்;தன்
மதிநலத் தூற்பல நூல்கள்

மிண்டிய ஆய்வின் திறத்தினைக் காட்டி
விளங்குற எழுதிய நல்லோன்;
அண்டுமாங் கிலமும் ஆந்திர மொழியும்
அமைவுறப் பயின்றசால் புடையோன்.

திரு வெள்ளைவாரணன், தமிழ்த்துறை துணைப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சோணாட்டில் சைவநாத் திகழிரட்டி
யார்மரபின் தோன்ற லாகிச்
சேணாட்டார் ஆங்கிலமும் செந்தமிழும்
பயின்றுதிகழ் புலமை யெய்தி
நாணாறும் தமிழ்மொழியின் அறிவியல்நூல்
பலவியற்றி நாடு போற்ற
வீணாட்கள் படாதுதம் வாழ்நாட்கள்
தமிழ்க்கெனவே உழைக்கும் வீரர்

திரு. பூ. அமிர்தலிங்கம், தமிழ்த்துணைப் பேராசிரியர்,
அழகப்பா கல்லூரி, காரைக்குடி

புன்முறுவல் பூத்தமுகம் பொழுதெல்லாம் சோர்வின்றிப்
பன்னூல்கள் எழுதுங்கை படர்ந்துவரும் அறிவியலின்
தன்மையெலாம் தாய்மொழியில் தரவிழையும் தமிழ்நெஞ்சம்
என்னுளத்தில் மகிழ்வூட்டும் இனியவனை வாழ்த்துகின்றேன்.

கற்பிக்கும் முறைகண்ட கணக்காயன் வாழியரோ
அற்புதமாம் அணுநூலுக் கரசாங்கம் பரிசுபெறும்
விற்பன்னர் வாழியரோ! வேங்கடவன் கடிதத்தால்
உற்பவிக்கும் கடுக்காக்க உரைவகுத்தோன் வாழியரோ!

டாக்டர் பு.மு. சாந்த மூர்த்தி, தமிழ்ப் பேராசிரியர்,
சௌராஷ்டிரா கல்லூரி, மதுரை

சொல்லார்ந்த நாவன்மைச் செம்மை தந்து
சுவையார்ந்த அறிவியலின் வளங்கள் தமது
நல்லாரின் நடுவினிலே உயர்ந்த நல்லார்
நாடுகின்ற ஏற்றத்தின் நன்மை தந்து
வில்லார்ந்த வேங்கடவன் மொழிகள் தந்து
விருப்பத்தில் தமிழ்க்காதல் இறைமை தந்தார்
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும் போதில்
பரமனவன் திருவருளே வாழ்த்து மன்றோ?

தணியாத அன்பாலே தழைக்கச் செய்தார்
தாமுணர்ந்த அறிவியலை தமிழுக் கீந்தார்.

திரு. செங்கைப் பொதுவன், பதிப்பாசிரியர், தமிழ்நாடு வரலாறு,
தமிழ் வளர்ச்சி இயக்ககம், குறளகம், சென்னை - 108

தமிழில் அறிவியல் தழைதர அறியநல் பெருநூல்கள்
அமிழ்தினு மினியவை யெனஉயர் அறிவினர் புகழ்தரவும்
இறைவனின் பதிகளை இயம்பிய திறமையை நவில்தரவும்
அரியபல் தொண்டுரு அமைதரு புலவன் வாழியவே

மேதை 'தமிழ்கற் பிக்கும்' முறைகள்
விழையும் 'கல்வி உளவியல்' வழங்கினை
தீதில் நூல்பல செய்து புகழுடன்
சிறப்புப் பரிசுகள் பெற்றுச் சிறந்தனை

ஆய்வுரையில் 'டாக்டர்' எனும் பட்டம் கொண்டாய்
நேயர்களால் 'அருங்கலைக்கோன்' எனப்பேர் பெற்றாய்
வீட்டுமரத்து வமதனில் டாக்டர் ஆனாய்
நாட்டுக்கு உழைத்ததனால் நற்பேர் பெற்றாய்

'அறிவியல் விருந்து' படைத்தாய்
'அறிவுக்கு விருந்து' கொடுத்தாய்
'எறியும் ராக்கெட்'(டுகள்) தந்தாய்
'இல்லற நெறி'யில் சென்றாய்

'கவிஞன் உள்ளம்' ஈந்தாய்
'காதல்ஓ வியங்'(கள்) ஆனாய்
'கவிதை அநுபவம்' கொண்டாய்
'கம்பனில் மக்க'ளைக் கண்டாய்.

திரு. எஸ்.கே. இராமராசன் (கம்பராமன்) வேலூர், சேலம் மாவட்டம்

கற்றவர்க்குப் புலனாகாக் காப்பி யத்தைக்
கலைமெருகு கொடுத்தினிதே யறியச் செய்தாய்,
பொற்கொடியார் தமைமணக்கும் காளை கட்குப்
பொலிவுடையில் பெறநெறியைப் பொலியச் செய்தாய்
கொற்றமுறும் அணுநுட்பம் இனிதே யாய்ந்து
குளிர்தமிழிற் பகர்ந்துள்ளும் தெளியச் செய்தாய்
உற்றகலை திங்கட்குப் பயணம் செய்த
ஒளிநெறியை உளந்தோறும் விரியச் செய்தாய்

மலருற்ற வாசம்போல் விழிக்கெட் டாமல்
மனத்தினிலே உணர்வளிக்கும் கவிதை தன்னை
நலமுற்ற சான்றோர்கள் வியப்புக் கொள்ள
நயமுற்ற பெருநூலில் இனிதே யாய்ந்து
வலமுற்ற சான்றோர்கள் நாளும் நாளும்
வாழியநம் சுப்புநம்பி என்று போற்றப்
புலமுற்ற உயர்வாழ்த்தைப் பெற்றாய்! பெற்றாய்!
பொலிவுடைய இமயம்போல் கீர்த்தி பெற்றாய்.

உன்னுகின்ற போதெல்லாம் இன்பம் நல்கும்
ஒப்பற்ற வாய்மொழியை இனிதே யாய்ந்து
நன்னயம்சால் நம்பிள்ளை முதலாம் சான்றோர்
நல்வழியில் இனிதேகிக் காரி மாறன்
பன்னியத் துவம்கண்டு டாக்டர் என்று
பார்புகழச் சிறப்புற்றாய் சுப்பு நம்பி!
இன்னும்பல் நூல்யாத்து வாழ்க! வாழ்க!
ஏற்றமுடன் பல்லூழி வாழ்க! வாழ்க!

புலவர் கு. இரா. இராதாகிருட்டிணன், தமிழாசிரியர் (ஓய்வு),
செவிந்திப்பட்டி, திருச்சி மாவட்டம்

புன்னகை தனையே வாழ்வினில் என்றும்
பொன்னகை யாகநீர் கொண்டீர்
அந்நகை தனையே அடைந்தவர் தமக்கும்
அளித்திடும் பெருமையும் பெற்றீர்
புன்னகை யன்றிப் பெருநகை தனையும்
பேச்சிடை வழங்கிடும் பெரியீர்
அந்நகைக் கொண்டோர் வாழ்வினில் என்றும்
அடைவது இன்பமே அன்றோ.

****